**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
இணை இயக்குநர் (மேல்நிலை),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக்கல்வி
அலுவலர்கள்

**ந.க.எண். 241193 / NTS /2018** **நாள் : 04.09.2018**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தேசிய திறனாய்வுத் தேர்வு நவம்பர் 2018 – பள்ளி மாணவர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் – குறித்து.

**பார்வை :** இதே எண்ணிட்ட செய்திக்குறிப்பு நாள்.20.08.2018.

*********

பார்வையில் காணும் செய்திக்குறிப்பில் 2018–ம் ஆண்டு நவம்பர் 4–ல் நடைபெறவுள்ள தேசிய திறனாய்வுத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் பத்தாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்கள் இணையதளம் மூலமாக விண்ணப்பப் படிவங்களை 23.08.2018 முதல் 05.09.2018 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

**<u>பதிவேற்றம் செய்தல் தொடர்பான விவரங்கள்;-</u>**

மேற்குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பித்த 10- ம் வகுப்பு பள்ளி மாணவர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்னும் இணையதளம் மூலமாக 06.09.2018 முதல் 15.09.2018 வரை பதிவு செய்யலாம் என்ற விவரத்தினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி, மெட்ரிக் பள்ளி, ஆங்கிலோ-இந்தியன், CBSE மற்றும் KB (கேந்திர வித்யாலயா) பள்ளிகளுக்குத் தெரிவிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது.

## PROCEDURE

www.dge.tn.gov.in

↓

**Click** –ACCESS TO ONLINE PORTAL

↓

NTSE EXAM- NOV 2018
APPLICATION REGISTRATION

↓

ENTER – USER ID- PASSWORD

2..

## அறிவுரைகள்

1. நடப்பு கல்வியாண்டு முதல் கல்வி மாவட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதால் அனைத்துப் பள்ளிகளுக்கும் (CBSE,KV,NIOS நீங்கலாக) புதிதாக வழங்கப்பட்ட School Code-ஐ USER ID–ஆகவும் ஏற்கனவே வழங்கப்பட்ட Password –யையும் பயன்படுத்தி மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்து கொள்ள அறிவுறுத்த வேண்டும்.

   CBSE/KV/NIOS/ICSE/ISCE பள்ளிகள் மட்டும் கடந்த வருடம் வழங்கப்பட்ட USER ID/Password பயன்படுத்தி பதிவேற்றம் செய்யலாம்.

2. இந்த வருடம் 2018 முதல் EMIS- ன் அடிப்படையில் மாணவர்களின் பதிவு நடைபெறவுள்ளது. எனவே, மாணவர்களின் EMIS எண்ணினை பதிவு செய்தவுடன் பெரும்பாலான விவரங்கள் உடனடியாக திரையில் தோன்றும். அதில் திருத்தங்களை மேற்கொள்ளவும், விடுபட்டுள்ள விவரங்களையும், புகைப்படத்தையும் பதிவேற்றம் செய்தால் போதுமானதாகும். CBSE/KV மாணவர்களுக்கும் இந்நடை முறை பொருந்தும்.

## பதிவேற்றம் செய்யும் போது நினைவில் கொள்ள வேண்டிய விவரங்கள்:

3. தேர்வர்கள் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்துள்ள விவரங்கள் சரிதானா என்பதனைப் பள்ளி ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்த்த பின்னர் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையான அட்டையின் நகல் மற்றும் OBC/SC/ST மாணவர்களின் சாதிச்சான்றிதழ் நகலினை மாணவர்களிடமிருந்து பெற்று பள்ளியின் வசம் வைத்திருந்து, இவ்வலுவலகத்திலிருந்து கோரும்போது சமர்ப்பிக்கப்படவேண்டும்.

5. OBC என்பது BC, MBC, BC(M), DC என்பவை உள்ளடக்கியதாகும். ஆனால் இவர்களில் OBC சான்றிதழ் (Non Creamy Layer) வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே 27% இடஒதுக்கீட்டின்படி இரண்டாம் நிலை தேர்வெழுத அனுமதி வழங்கப்படும். எனவே, OBC சான்றிதழ் பெற உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள மாணவர்களின் பெற்றோர்களுக்கு அறிவுறுத்தப்படவேண்டும்.

6. பள்ளி முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர், முகவரியினை அஞ்சல் குறியீட்டுடன் (Pin Code) பதிவு செய்யப்படவேண்டும்.

7. வீட்டு முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர் மற்றும் முகவரியினை பதியக்கூடாது. தேர்வரின் வீட்டு முகவரி மட்டுமே பதியப்படவேண்டும்.

8. பெற்றோரின் தொலைபேசி/கைப்பேசி என்ற கலத்திலும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி/கைபேசி எண்ணையே பதிய வேண்டும். பள்ளியின் தொலைபேசி என்ற கலத்தில் மட்டும் பள்ளியின் தொலைபேசி எண்ணினை பதிந்தால் போதுமானது.

9. **06.09.2018** முதல் **15.09.2018** வரை மட்டும் பதிவில் ஏதேனும் மாற்றம் (EDIT) இருப்பின் செய்து கொள்ளலாம். அதன் பின் எந்த பதிவுகளும் கண்டிப்பாக மாற்ற இயலாது.

பதிவேற்றம் முடிந்தவுடன் Summary Report மற்றும் தேர்வுக் கட்டணத்தை (ஒரு தேர்வருக்கு ரூ.50/– வீதம்) சம்பந்தப்பட்ட மாவட்டக்கல்வி அலுவலர்களிடம் **17.09.2018**–க்குள் ஒப்படைக்குமாறு அனைத்து பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அவ்வாறு பெறப்படும் தேர்வுக் கட்டணத்தை மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு உறுதி செய்தபின் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலம் Fees Update செய்திடுமாறு மாவட்டக்கல்வி அலுவலர்கள் கேட்டுப்படுகிறார்கள்.

17.09.2018 முதல் **26.09.2018** வரை Fees Update Page Screen-ல் வெளியிடப்படும் அனைத்து பள்ளிகளில் இருந்தும் தேர்வுக் கட்டணத் தொகை பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

அனைத்து பள்ளிகளிலிருந்தும் தேர்வுக் கட்டணத் தொகை பெறப்பட்டபின் அத்தொகையை "DIRECTOR OF GOVERNMENT EXAMINATIONS, CHENNAI-6" என்ற பெயரிட்ட முகவரிக்கு வங்கி வரைவோலை எடுத்து, Summary Report மற்றும் வரைவோலையை **27.09.2018**–க்குள் சம்பந்தப்பட்ட மண்டலத்துணை இயக்குநர் அலுவலகத்தில் தவறாமல் ஒப்படைக்க வேண்டும்.

விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் காலம்**: 06.09.2018 –15.09.2018**
விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் **:15.09.2018**
**விண்ணப்பக் கட்டணத்தினை சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டிய நாள்: 17.09.2018**
FEES UPDATE செய்ய வேண்டிய நாள்**: 17.09.2018 – 26.09.2018**
தேர்வு கட்டணத்தை மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள்**:27.09.2018**

நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குப் பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் வாய்ப்பளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. புறச்சரக எண் (Out of Range number) கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் உரிய இணைப்பு சான்றிதழ்களுடன் சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் வசம் வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்துமாறும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–
**இணை இயக்குநர்(மேல்நிலை)**

**நகல்**

1. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்
2. அனைத்து அரசுத் தேர்வுத் மண்டலத்துணை இயக்குநர்கள்
   –தகவலுக்காவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.